2012 ஏப்ரல் 24]

154—

ஏற்றுமதி மையம்

***2713—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி பகுதியில் மாம்பழக் கூழ் ஏற்றுமதி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி பகுதியில் மாம்பழக் கூழ் ஏற்றுமதி மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 155, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

155—

கால்நடை மருத்துவமனை

***7280—திருமதி க. அழகுவேலு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, அம்மகளத்தூர் அல்லது நாட்டார்மங்கலத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கள்ளக்குறிச்சி தொகுதி, அம்மகளத்தூர் அல்லது நாட்டார்மங்கலத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்கும்போது, இதுபோன்று நேரடியாக கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா என்று கேட்கக் கூடாது. முதலிலே, அங்கே கிளை நிலையம் அமைக்கப்படுமா என்றுதான் கேட்க வேண்டும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற அந்தப் பகுதி, விதிகளுக்குட்பட்டிருக்கும் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக அங்கே கிளை நிலையம் அமைப்பதற்குப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.*

திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய தாய்மார்களின் வருவாயைப் பெருக்க விலையில்லா 4 வெள்ளாடுகள் அல்லது செம்மறியாடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கி, ஏழைகளின் துயர்துடைத்த தமிழகத்தின் காவல் தெய்வம், எங்களின் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

எங்களுடைய கள்ளக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட சின்னசேலம் ஒன்றியத்தில் உள்ள அம்மகளத்தூர், கருங்குழி, உலகியநல்லூர், ஈரியூர், நாட்டார்மங்கலம், தென்சிறுவலூர் ஆகிய கிராமங்களில் ஒவ்வொரு கிராமத்திலும் சுமார் 500—க்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. ஒவ்வொரு கிராமத்திலிருந்தும், கால்நடை மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்றால், குறைந்தபட்சம் 6 கிலோ மீட்டர் வரை செல்ல வேண்டியிருப்பதால், நாட்டார்மங்கலம் அல்லது அம்மகளத்தூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பு இல்லாவிட்டாலும், அங்கே கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தர பரிசீலிக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அதற்கு உத்தரவிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 156, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*